ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத் ராமாயண காவடிச்சிந்தென வழங்கும்

இராமாயணத்

திருப்புகழ்ச் சிந்து.

(காவடிச்சிந்து வர்ணமெட்டு.)



இவை, ஜெயங்கொண்ட சோழபுரம்

வா. கிருஷ்ணசாமிக் கோனரா லியற்றியதை,

காலஞ்சென்ற, பெ. ஆறுமுக முதலியார் குமாரத்தி

தாயாரம்மாளால்

சென்னை - சூளை,

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1934. [அணா 2.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத் இராமாயண காவடிச்சிந்தென வழங்கும்

இராமாயண

திருப்புகழ்ச் சிந்து.

காவடிச்சிந்து வர்ணமெட்டு.

இஃது,

திருச்சிறுப்பள்ளி ஜில்லா ஜெயங்கொண்ட சோழபுரம்
ம-ா-ா-ஸ்ரீ வாசுதேவக் கோனூர் அவர்கள் குமாரர்

கிருஷ்ணசாமிக் கோனூரால்

இயற்றப்பட்டு,

கும்பகோணம் புஸ்தகஷாப்
காயண விகட சேரியென்னும்

கே. வீ. கதிர்வேல் பிள்ளை அவர்களால்

பரிசோதித்து,

கும்பகோணம் புஸ்தக வியாபாரம்
ஆர். கோவிந்தசாமி நாயுடு விருப்பத்தின்படி

காலஞ்சென்ற - பெ. ஆறுமுக முதலியார் குமாரத்தி
தாயார் அம்மாளால்,

சென்னை - சூளை,
"பெரியநாயகியம்மன்" அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

19-ம் பதிப்பு.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1934 [விலை அணு 2.

ஸ்ரீ
ஸ்ரீராமஜெயம்.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:— ஸ்ரீமத் இராமாயணத் திருப்புகழ்ச் சிந்து என்னும் புஸ்தகத்தை வெண்தமிழ் நடையாக திருச்சினாப்பள்ளி ஜில்லா ஜெயங்கொண்ட சோழபுரம் ம-ா-ா-ஸ்ரீ வாசுதேவக் கோனார் அவர்கள் குமாரர் கிருஷ்ணசாமிக் கோனாரால் எழுதினதை எனது தகப்பனாராகிய பெ. ஆறுமுக முதலியாருக்குச் சகல சுதந்திரம் கொடுத்துவிட்டபடியால், இதை என் அனுமதியில்லாமல் இதரமானவர்கள் எவ்விதத்திலாகிலும் அச்சிடலாகாதென கனம்பொருந்திய கவர்ன்மெண்டார் சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் காபிரைட் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு,
தாயாரம்மாள்.

விளம்பரம்.

வித்தியாப்பியாசிகளுக்கு தெரிவிப்பது யாதெனில்:—

எமது புத்தகசாலையில் அநேகவித சரித்திரங்கள், திருப்புகழ் காவடிச்சிந்து வர்ண மெட்டுகளில் எழுதி அச்சிட்டிருக்கிறோம். தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கெழுதி பெற்றுக் கொள்ளலாம்.

புத்தகங்கள் தேவையானவர்கள் வேண்டிய புத்தகங்களின் விலைக்குத் தகுந்த போஸ்டு பில்லைகள் வாங்கி கவரில்வைத் தனுப்பினால் உடனே நீர் கோரிய புத்தகத்தை அனுப்புவோம். தபால் பில்லைகள் அனுப்பாமல் அனுப்பச்சொல்லி எழுதினால் நாங்கள் அனுப்ப வி. பி. சார்ஜ் 1-புத்தகத்திற்கு 5-அணாவாகும். அதனால் மேற்சொன்னபடி தபால் பில்லைகள் அனுப்பினால் நாங்கள் புக்போஸ்டாக அனுப்புவோம் நீங்கள் அவ்விடத்தில் 1-அணா கொடுத்து வாங்கிக் கொள்ளவும். அப்படி அனுப்பினால் புஸ்தகம் உங்களுக்கு பத்திரமாக சேரும்.

இப்படிக்கு,
தாயாரம்மாள்,

நெ. 28, பெருமாள் கோவில் தோட்ட தெருவு 2-வது சந்து,
சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

முகவுரை.

—(*)—

சகலமான பக்த சிரோன்மணிகளுக்கும், கல்விமான்களுக்கும் தெரிவிப்பதாவது—வித்வ விவேக கல்வி களஞ்சிய கந்தனருள் பூர்த்தியடைந்த ம-ா-ா-ஸ்ரீ சீமான் சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் அவர்கள் கழுகுமலை சுப்ரமணியர் மீதில் பாடிய காவடிச் சிந்தின் சந்தங்கொண்டும், திருவண்ணாமலையில் எழுந்தருளிய வரப் பிரசாத அருணகிரிநாதர் மால்மருகன் முருகன்மீது பாடிய திருப் புகழின் சந்தங்களைக் கொண்டும் ஸ்ரீமத் வைகுண்ட நாதனும் உலக ரட்சகனும் விளங்காநின்ற ஸ்ரீ மகாவிஷ்ணுவின் அம்சத்தி லொன்றை திருக்கைலாயத்தில் பார்வதி தேவிக்குப் பரமேஸ்வரன் உபதேசித்த தாரகப்பொருளான ராமநாம மந்திரத்தை வாய்ந்த ராமாயணத் திருப்புகழ் காவடிச் சிந்தென ஷை சந்தங்களுக்குக் குறையாமல் அறியாத சிறுவனாகிய இயன்றவரையில் எழுதியிருக் கிறேன்.

இங்ஙனம்,

ஜெ. வா. கி.

குறள்.

குழலினிது யாழினிது யென்பர்தம்
மழலைச் சொற் கேளாதவர்
எப்பொருள் யார்யார் வாய்கேட்பினு
மப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத் இராமாயணத் திருப்புகழ் இமிடேஷன் பதிப்பு,

புத்தக அறிக்கை.

திருச்சிராப்பள்ளி ஜில்லா ஜெயங்கொண்ட சோழபுரம் வா. கிருஷ்ணசாமிக் கோனார் அவர்களாலியற்றிய இராமாயணத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு என்னும் எமது அபூர்வபுத்தகத்தை வாங்கி வாசிக்கும் நண்பர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில்,

நண்பர்காள்! மேற்கூறிய இராமாயணத் திருப்புகழ் காவடிச் சிந்து என்னும் புத்தகத்தை மேற்படி கிருஷ்ணசாமிக் கோனார் அவர்களால் இயற்றப்பட்டு, பெ. ஆறுமுக முதலியாரால் சுமார் பதினாறு பதிப்புகள் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டு உலகமெங்கும் பிரசித்தியடைந்து யாவராலும் புகழ்பெற்று வருவதும் இதற்கென கிடைக்கப்பட்ட நற்சாக்ஷிப் பத்திரங்களின் பெருமையும் யாவருக்குந் தெரிந்த விஷயமே, ஆகையால் எனது வியாபாரத்தின் பொறாமையாலும் மேற்படி கோனார் அவர்களின் கவியை பங்கப்படுத்தவும் துர் எண்ணங்கொண்ட சிலர் புதிதாக ஸ்ரீமத் ராமாயணத் திருப்புகழ் என "இமிடேஷன்" புத்தகத்தை அச்சிட்டு எமது வியாபாரத்தைக் கெடுக்க உத்தேசித்து அசுத்தமான பதிப்பாக அச்சிட்டு விற்றுவருகிறார்கள். ஆகையால் ஷை ராமாயணத் திருப்புகழ் புத்தகத்தை வாங்க விருப்பமுள்ள நண்பர்கள் மேற்படி புத்தகத்தின் டைட்டல் பேஜியின்மேல் ஜெயங்கொண்ட சோழபுரம் வா. கிருஷ்ணசாமிக் கோனார் இயற்றியதுதானவென பார்த்து வாங்குவீரென நம்புகிறேன்.

இப்படிக்கு,

தாயாரம்மாள்,

நெ. 28, பெருமாள் கோவில் தோட்ட தெருவு, 2-வது சந்து,
சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத் இராமாயண

திருப்புகழ்ச் சிந்து.

காவடிச்சிந்து வர்ணமெட்டு.

விநாயகர் துதி - வெண்பா.

சுந்தரஞ்சேர் மானுலகு துய்யன் ரகுபதிமேல்
செந்தமிழால் கீர்த்தனங்கள் செப்புதற்கு—சந்ததமும்
சங்கரனா ரீன்றசுதன் தந்திமுக னானவுய
ரைங்கரனா ரின்று டுணை.

அனுமார் துதி - வெண்பா.

தென்னிலங்கை ராவணன்றன் சென்னிபத்தும் கொய்தரெகு
மன்னவனின் தூதனா மாருதியே—நன்னயஞ்சேர்
அஞ்சனையாள் புத்திரனே அற்புதமே கற்பகமே
வஞ்சமின்றி நீ துணையாய் வா.

விநாயகர் கீர்த்தனம்.

திருமால் மருகனே என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

1 சிவனார்மகிழ் மகனே திகழொளியே கஜமுகனே அந்த
சேவற்கொடியோனையீன்ற பூவைக்கிடபாகந்தந்த சிவ

2 தவயோகிகள் குருவேயொளிர் தருவேதத்தினுருவே வுன்
தாளிணைப்பணிந்தேன் பதத்தாளிணையானவுந் தொலைய எழில்

3 மனமுமிறங் கலையாமகிழ் தேனையாளவுங் கொலையா எழில்
மங்கையர் வல்லபை மகிழ் சிங்கார சுந்திரதீரா

4 அனுதினமுந் துதிசெய்தேன் அன்புடனுன் பதமுய்தேன்புகழ்
அய்யனேமெய்யனே குணதுய்யனே கிருஷ்ணனைக்காரும் சிவ

அனுமார் பேரில் கீர்த்தனம்.

இன்னமுமேனோடி என்ற வர்ணமெட்டு.

1 அம்புவிபோற்றுங் கனவானே
அரிராகவதூத னனுமானே
நம்பிக்கையோர்ந்து ராமனுடன் சேர்ந்து
உம்பரிதுக்கத்தை அன்பாய் தவிர்த்தோனே அம்

2 யம்பனிராவணன்மாளா வுயிர்
வஞ்சிஜானகி சிறைமீள
நம்பியசுக்ரீபன் நன்மகுடஞ்சூட
நானிலந் தன்னி லுதித்தாயே அம்

3 பார அசோகவனம் தானேமுற்றும்
பதறக்கதற முறித்தோனே
கோர அரக்கரை கூட்டியேயெமலோகம்
சேரும்படிசெய்த சிங்காரதீரனே அம்

4 ஆரவாரத்துட னுற்றாய் அழி
யாதசிரஞ்சீவி பெற்றாய்
தாரணியிற்றமிழ் சோரமிலாதருள்
தாசர்கள் தாசனும் தாசன்கிருஷ்ணசாமி அம்

மகாவிஷ்ணு துதி.

திருவுற்றி லகுகங்கை என்ற வர்ணமெட்டு.

1 புகழ்வுற் றிலகுகங்கை மகிமைதுலங்குசிங்க
புனிதன் தனைவதைத்த நாரணன் எழில்
ஜானகிக் கிசைந்தபரி பூரணன் வுயர்
பூசார்ப்பணி யாதவக்குல மாசிலாமணி யானதற்பர
புகல்றகரிய பராக்ரமனே வினை
அகலக்கனிமிகுந்த நாமனே

2 குசனுக் கினியனேய சகுணக் குணவிலாச
குமரக் குகனுக்கொரு மாமனே புகழ
அமரர்க் கருள்வந்த பூமனே அன்று
குஞ்சரங்கதி நீயெனத்ததி கூவிடப்பதி மேவியப்பெரு
குறையைத் தவிர்த்தந்த பாலனே அரு
மறைகட் டெரியவந்த சீலனே

---

3 கருணைப் பெறநினைந்த துருவன் தனக்குகந்த
கருணைக் கடலெனுங்கார் வண்ணனே மேரு
கிரியைக் குடைபிடிக்குங் கண்ணனே அன்று
காவில்மாடுக ளோடுகூடவே மேவிசென்றிடு தேவனாகிய
கமரக் கரமிலங்குந் தூயனே அரை
நிமையிற் புவிகலங்கு மாயனே

4 அருமைப் புலவர்சித்த மனதிற்களிமிகுத்த
அறிவிற் பரவுமுத்தி நாதனே அதி
விரைவிற் றகிலளித்த பாதனே எழில்
ஆயர்மாமனை மீதிலேவளர் கோதையர்க்கொரு சேயனாகிய
அருமைமிகுந்த கிருஷ்ணசாமியே தமிழ்
பொருமை புணர்ந்தல்ல நேமியே

வெங்கடாசலபதி பேரில்

திருப்புகழ் சந்தம்.

1 திரிநூறுநாட்கள் கருவோடிருந்து உருவாய்த் திரண்டு
புவிமீதே
இகழாய்ப்பிறந்து கலையேதெரிந்து சிலவேட் கணைக்கு
ளூரவாகி

2 அறிவே தவழ்ந்து மயவேமிகுந்து அதிலேகிடந்து
உழலாமல்
உன்னருளால் சிறந்து மனமேதிருந்த வருவாய் பறந்து
சுகமேவி

3 சருவேயுதிர்ந்த மரம்போலிருந்து சதியாணிரண்யன்
மகனாரும்
ததியாளவென்று முறையாடஸ்தம்பம் தனிலேகி கிருபை
புரிந்தோனே

4 அறவே மிகுந்த உருவாயமைந்த பரிவான சப்த
கிரியேவும்
அலர்மேலுமங்கை மணவாளனான வடவேங்கடேச
பெருமாளே.

பெருமாள் சந்நிதியில் தேவர்கள் முறைப்பாடு.

பொன்னுலவு சென்னிகுள என்ற வர்ணமெட்டு.

ரஞ்சிதஞ்சேர் வஞ்சிதிரு கொஞ்சிடுங் குணாளனை
காரணா கருணைவைத்துப் பாராய் பரி
பூரணா வுயிர்கொடுத்துக் காரய்யா வெகு

நாசமுற்றிடு பாவிராக்ஷதர் மோசமிப்படி யாய்நடத்திட
நாங்களினி யெநதவித முய்குவோம் இச்சை
தாங்கவில்லையே ஹரியென் செய்குவோம்

பெருமாள் தேவர்களுக் கிரங்கி அருள்கூறல்.

ஷை வர்ண மெட்டு.

1 தஞ்சமென வந்தவர்கள் அஞ்சவேண்டா முங்களுக்கு
சஞ்சலந் தருந்துயரை யோட்டுவேன் அரக்கர்
துஞ்சவேகை வாளியினால் மாட்டுவேன் இந்த
தரணியிற்புகழ்பெருமைதங்கிய தசரதர்க்கொருசுதனெனச்சப
ஜென்மமு மெடுக்கிற னின்னேரமே உங்கள்
துன்பமு மகற்றுவே னன்னேரமே

பால காண்டம்.

விஸ்வாமித்திர மகாரிஷி தன்னுடைய வேள்வி முடிவதற்காக தசரதரிடம் வந்து ஸ்ரீராமரைத் தாவென்று கேட்பது.

ஆறுமுக வடிவேலனை என்ற மெட்டு.

1 நாடோர் புகழ்பெருங் கிரீடாதியே ராஜகுணாநிதியே-உனை
நம்பிவந்தேனெனக் கின்பமாய்த் தந்தருள் ராமனையித்ததியே

2 தாடகைப்பாவி தடுக்குறாள் வேள்வியை தாமசம்செய்யாதே
இந்த-தாரணியிற்பெருங் கீர்த்திகளுற்றிடும் தந்திடவிப்போதே

உம்பர்விசாரமொழிக்க அன்னைரமேசம்பாரனைக்கொன்றுமே
அந்த அன்புதலைழக்கவே ராமனைத்தந்தாலநேகம்பெருவாயே
1 கோபத்தில்ருத்திரனுனவிஸ்வாமித்திரன் கோரிதந்தேனுனையே
இந்த
ஆபத்தைக்காக்கவேணும் விரைவிலனுப்புவாய் நீயெனையே

தசரதர் ஷை ரிஷியிடம் ராமன் சிறுகுழந்தையாதலால் நான் வந்து வேள்வியை முடிக்கிறேனென பதிலுரைத்தல்.

கண்ணுயிரம்படைத்த என்ற வர்ணமெட்டு.

1 ஆபத்தெனவேவந்த கோபத்தினில்மிகுந்த
அவனிகலங்கிடும் கவுசிகமாமுனி அய்யனே அரை
கொடிதனிற்றுடகை மடியநொருக்குறேன் மெய்யனே

2 பாபச்செயலறியான கோபமேதுங்கூறியான் அப்
பாவியைபெவ்வித மாவிவிடுத்திடச் செய்குவேன் முலைப்
பால்மனமாறிய கனையேதென யெய்குவான்

3 சரியல்லவேநீ சொன்ன முறையதனையானெண்ண
சஞ்சலமாகித் தவிர்க்குதே யென்னுடன் ஆவியே என்
தனையனைப்பிரிந்திடில் நீங்குமேயென்னுயிர் மேவியே

வசிஷ்டர் தசரதரிடம் ஸ்ரீராமனைக் கவுசிகர் பின்னுல் அனுப்பினுல் மோசம் வராதென நன்மொழிகூறல்.

ஷை வர்ண மெட்டு.

1 மோசம்வராது சொன்னேன் கொசிகனுரின் பின்னே
முகமலர்கொடு ரெகுபதியெனு மகிபனைக்கூட்டுவாய் அம்
முனிவனுலருள் மிகுமகுடமுஞ் சடுதியிற் சூட்டுவாய்

தேவர்கள் முறைபாடு.

ஜோர் ஜோர் என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

பல்லவி.

க்ஷீராப்தி சயனனே தேவனே காரும்

அநுபல்லவி.

தேவனுனை தேவனே நீ திருவருள்புரி கருணையுடனே க்ஷீ

சரணம்.

3 கோரா அரக்கர் செய்யுங்கொடுமை
குறைகளனைத்தும் முறையிட்டோமே க்ஷீ

4 அடைக்கலமென் றோடிவந்தோம்
அபயமபயம் ஆதரிப்பாய் க்ஷீ

அயோத்யா காண்டம்.

இலக்ஷ்மணன் ஸ்ரீராமருக்கு தானே மகுடங் கொடுக்கிறேனென்று கோபத்துடன் கூறல்.

வெள்ளிமலை யொத்தபல மேனட என்ற வர்ணமெட்டு.

1 நான்தருவேன் ராமனுக்கு மகுடம் என்ன
ஞாயமோ பரதனுக்குக கிரீடம் நிலை
காட்டிஷோரைக் காட்டிடிலோ வாட்டியெமலோக
மனுப்பிடுவேன் வதைத்திடுவேன்

2 சேனைபோர்போர்வீர ரென்னைக்கூடி ஜெயம்
பெற்றிடவே வந்தாலுமே நாடி என்றன்
சித்திரக் கணையால்வென்று அத்தனைபேரையும்
கொன்று தேர்வேன் மனதார்வேன்

3 குருடனை ராஜமுழி முழிக்கச் செய்யும்
கொள்கைபோலவே வுலகம் செழிக்கப் பட்டம்
கொள்ளுமோ பரதனுக்கு வெல்லுமோ ரவிமுன்
பனிநின்றே இது மொன்றே

4 தாரதம்மியமறியாக் கோனே பெற்ற
தசரதனுக்கிடந்து தானே பூவில்
தத்தளித்தருமுருகி பித்தனைப்போ லலைந்திட
நானே செய்கு வேனே.

இலக்ஷ்மணன் கோபத்தை ஸ்ரீராமர் ஆற்றுதல்.

மஞ்சுளிதர் குந்தள என்ற வர்ணமெட்டு.

1 தம்பியுனக்கித்தனைகோபம் வந்ததுமெ னை நொந்திடத்தானே
தாங்கவொண்ணாத மனஸ்தாபம் எங்கும்
தந்தைசொல்லைவிட மந்திரமில்லையென
முந்தியோர்க ளுசுந்தபழமொழி
தாரணியிற்கேட்டதில்லையா தகப்பன்பேசைவிளங்கும்சீரே
தன்மையா யிதிலென் சொல்லையா

2 இன்பமாய் பயின்றவள்தானே நமைவிரும்பா மனமிரும்பா
இதனைநீ யறிந்திடா தேனே அடா
இனிமேலுனைக்கண்டபேர்கள் பழிக்கவோ
வினையமிதுவென சடலமொழிக்கவோ [டே
இங்கருமை தந்தைவாக்கியம் சத்தியமென்றேமெத்தவுங்கொண்
யேகுவதல்லோ சிலாக்கியம்

ஆரண்ய காண்டம்.

ஸ்ரீராமரைக்கண்டு புகழ்தல்

திருப்புகழ்.

இசைந்த ஏரும் என்ற வர்ணமெட்டு.

1 விரிந்தமார்பும் மாவுரிபோர்வையும் வெகுநேரே அதில்
விளங்குநூலும் தகதகவென ஒலித்திடுசீரு

2 துறந்தசீலம் தவசிகட்கேபெருந் துணையாச்சே நாம்
துலக்கலாமினியரக்கர்பயமதை துயர்போச்சே

3 இருண்டமேகம் ஸ்யாமளவர்ணம்இவர் திரேகம் அருள்
இலங்குபாதம் அக்லிகைமேலுற அறியோம்

4 பொருந்துசிலன் பரதனுக்காய்சுடர் முடி வேண்டி மொழி
புகன்றகைகயை கவலைமைமாற்றியே பெருமாளே

தபசிகள் ஸ்ரீராமரிடம் அரக்கரால் படுந்துன்பத்தை முறையிடல்.

பூமிமெச்சிடும் என்ற மெட்டு

1 ரஞ்சிதலக்ஷ்மணன் வஞ்சியர் ஜானகி நாடவே
வந்தாய்கூடவே வினை யோடவே உனை
நம்பிநாங்கள்செய்ய யின்பமானதவம் நீடவேதுதி கூடவே

2 பஞ்சபாதக வஞ்சம் செப்துஷ்ட பாவிகள்
பொல்லாக்கோபிகள்படு லோபிகள் அவர்
பண்ணும் இம்சைகளை யெண்ணிலின்னாந்துய ராகுதே

3 பூமிபாரந்தவிர்க்க நேமமுடனுதித்த பூமனே
நல்லகோமானே வுயர் நாமனே வெகு
புண்யமுண்டுனக்கு கெண்யம்வைத்தருள் ராமனே

4 காமனைப்பயின்ற ஸ்ரீமந்நாராயணக் கர்த்தனே
பரிசுத்தனே அருள் முத்தனே இந்தக்
காலமெங்கட்கனு கூலஞ்செய்யக்கிர்பை கண்ணனே

ஸ்ரீராமர் தண்டகவனரிஷிகளுக்கு அபயமீதல்.

செந்தின்மாநகர்வாழ் கந்தநாதனிரு என்ற வர்ணமெட்டு.

1 அஞ்சவேண்டாமுங்கள் சஞ்சலந்தவிர்ப்பேன்
ஆசிர்வாதந் துணையே அரக்கர்க்
குண்டென்கையிற் கணையே வினை
அகற்றுவே ணினியே கன
ஆவலோடிருந்து மேகம்புரிந்து
ஆறுவீர்கள் முனியே

2 பஞ்சுபோலடித்து நஞ்சவே மடித்து
பாகுபோ அறுக்குறேன் அடி
வேர்களை நறுக்குறேன் அம்புக்
கிரையெனப் பொறுக்குறேன் சற்றும்

பதறிடாதிருங்கள் கதறிடாதிருங்கள்
பங்கிலேயிருக் கின்றேன்

3 மூதண்டமுற்றினும் கோதண்டத்தால்
வழிமூட்டுவேனே படியில் பலங்
காட்டுவேனே கொடியில் எடுத்
தாட்டுவேனே பிடியில்
மூதாதையான பெரியோர்கள்போல்
முயலுவேனே உங்களடியில்

சூர்ப்பனகை ஸ்ரீராமரைக்கண்டு மோஹித்தல்.

செந்தின்மாநக ரந்தனில் என்ற வர்ணமெட்டு.

1 இந்தமாமன்ன னேடுபெண்ணாளுமே
விந்தையதாய்க் கூடிநானேசுகம்
தந்திடவே செய்குவேனே இவன்
இகபரசுகமதனைத் தந்திடுமகிழ்
குணயீசனென்றிட
எந்தலோகத்துச் சந்திரராஜனோ
இந்திரனோ சந் திரன் தானோ
எனக்கென்றே அயன் படைத்தானே

2 கந்தமாமலர் வாசம் பொருந்திய
கற்பகவரியாமள தேகன் எழில்
அற்புதனான நற் றாயன் இவன்
மாலிலனுதினம் சீலமுடன்பணிந் தாலுமெனக்
கொருகாலு துயரிலே
கண்டவுடனென் அங்கமும்வாடுதே
காதலியானினி வேறொரு
நாதனும் வேண்டினேன் பாரில்

3 மார்வேள்தீரனானானு மிவனின்
மார்புக்கிணையாரு வானோவுயிர்
நேர்மைக்கிசைந்தவள் நானோசீர்
மந்தகாஸமிருந்த ரத்தினதந்திர
னிவனோடு யித்தினம்
மங்கையான் சொந்தநாயகி யாகினேன்

மனக்குறையாலவையும் கனத்துயரையின்று — விண்டேன்என்றழி கண்டேன்

4 வீரலேமிருந்த — தீரசிகாமணி
வேலேகுழும்புவி — மேலே ஒரு
சிலனுங்காணேன் — கண்ணாலே இந்த
வேந்தனின்பெரு — சாந்தசற்குணம்
மாந்தர்கட்கேயமைந்த — பொற்பணம்
மேல்விழியாளும் — பாரினில்லாரையும்
வேண்டிமனதினி — வெண்ணேன்இவனை
தீண்டாவிடிலமு — துண்ணேன்

மறுபடியும் சூர்ப்பனகி மோஹமுறல்,

அம்மா மதுரைமீனாக்ஷி என்ற வர்ணமெட்டு.

1 அந்தமானகுண — தீரன் என்
அறிவுக்கேற்ற — மாரன் சிங்கார
அனங்கன்பணி — வுதாரன்
அழகினிலொய் — யாரன் அந்த

2 சந்ததமுநான் — கூடிசீர்
சையோகத்தைநாடிக் — கொண்டாலே
சாயுஜ்யமுற்றுங் — கோடி
· தவரிடாது — மோடி அந்த

3 மைந்தன் கிருஷ்ணன் — தமிழ்பாடி வுயா
மன்னவுன்னைத் — தேடிவந்தேனே
மங்கையாறு — மோடி
மருவவென்ன — மோடி அந்த

சூர்ப்பனகி ராவணனிடம் ஸ்ரீராமர் முதலானவர்களுடைய வரலாறுகளைக்கூறி சீதை யுனக்கே தகுந்தவளெனச் சொல்வது.

திருப்புகழ் வங்கார மார்பிலணி என்ற வர்ணமெட்டு.

1 சிங்காரமார்பினொடு தேஜசுநிறைந்தவெழில்
சந்தோஷமாகயிரு பேர்களொருதையலுடன்
சிந்தாகுலங்களறும் பஞ்சவடிதீரமதில் — பகிழ்வாச

2 தீராதிதீரனென தேவர்களைப்போலவர்கள்
மாருதகாமமுயர் லெட்சுமணராமனென
தீயாதகாந்திஒளி வீசப்ரகாசமுடன் கண்டேன் நான்

3 மமங்கர்தமாலைபணி மாயனருள்நான்முகனும்
கொந்தாரமோககிளி யாரமொடு தோள்புரளும்
மாயாவிலாசமட மங்கையரையெந்தவிதம் புவிமேலே

4 உண்டாக்கினானோ அறியேனவனைநீயுமினி
கண்டாலுமுன்றன்கலி தீருமிதுவுண்மையென
உத்தாரமேதுமொழி யாமலினிநீயவனை தொடர்வாயே

மாரீசன் ராவணனைப் பிடித்தல்.

பாதிராத்திரி வேளையில் என்ற வர்ணமெட்டு.

1 என்னயோசனை பண்ணினாயடா
ஏற்குமா இந்த புத்தி நின்று
கார்க்குமோ தெய்வம் நத்தி வும்பர்
யாவருமுன்னைப் பற்றி
புவியெங்குமே பழியோங்கவே
மொழிவாரடா அப கீர்த்தி

2 மண்ணுளோர் துதிராமனாகிய
மன்னனார் தேவியாலே வெகு
பின்னமாகு மென்மேலே ஆசை
யெண்ணிடாதே மண்மேலே கெடும்
மாயமோக விலாசமேயிதை
மறந்திடில் நல்ல வேளை

3 முந்தி யிந்திரன் அகலிகைமீது
மோகமாகிய தொட்டான் மனம்
நோகவே பழி பட்டான் சந்திரன்
வேகமே கவலை கெட்டான் அந்த
முறைமையாவையு மறியுநீயொரு
மூடன்போலுரைத் திட்டாய்

4 அந்தநாள் கர தூஷணர் சென்று
அழிந்தனரங்கு கோனே தங்கைக்
கருந்தது மூக்குந்தானே அதை
அறிந்திடா தின்னமேனே வுன்றது
அங்குயானேகில் தங்குவதேது
அழிவதே உண்மை நானே

பொய்வேடங் கொண்டுவந்த மாரீசனென்னு மானை பிடித்துதாவென்று சீதை ராமரிடம் சொல்வது.

ஆறுமுக வடிவேலனே என்ற வர்ணமெட்டு.

சீதை சொல்வது.

1 போகுது பாரொரு மானதிவேகமதாகவே ப்ராணபதி
அதை பூவைமகிழ்ந்திட தாவிபிடித்தருள் பூபதியித்ததியே

ஸ்ரீராமர் சொல்வது

2 பாகுமொழிபுகல் தோகையிளங்கொடி பங்கமிலாக் குயிலே
வெகு பக்ஷமுடனுனக் கித்ததிதந்திடுவே னடியென் மயிலே

லட்சுமணன் சொல்வது.

3 மானென்றுயெண்ணி மயங்கிடவேண்டா மதனிஜானகியாளே

ஜானகி

4 ஏனுபிடித்திட தாமதமின்னமும் யேகிடுவீர்நாதா
இங்கு இளையவர்வார்த்தையைக் கேட்டிடலென்மன
மேங்கிடுமோ நீதா

ஸ்ரீராமர்

5 சூழும்புவிதனிலெங்குசென்றாலும் சுருக்கிலதைப்பிடிப்பேன்
என்றன் தோகையுரேமனம் வாடிடவேண்டாந் துயரமதை
தவிர்ப்பேன்

லட்சுமணன்

6 ஏழைசொல்லம்பலமேற்குமோ கட்டளையின்படிசெய்வேனே
இனி யென்னாலாவதென்ன சொன்னேனிதின்பயன்யெவ்வித
மோ தோணேன்

கிஷ்கிந்தா காண்டம்.

அனுமார் மறைவாகநின்று ராமலக்ஷ்மணரைப் பார்த்து ஆலோசிப்பது.

சென்னிகுள நகர்வாசன் என்ற வர்ணமெட்டு.

1 ஆரிவரோ அறியேனே — வந்த
அற்புதமுங் குறியேனே — இவர்
ஆவிற்குண வாகும்பயிர் தேயும்படி யாகக்கடவா
தோர் நடவாதோர்

2 தீர ராக்கரைக்கொன்று — ஜெயம்
பூரணவந்தாரோ தான்வென்று — இவர்
தேவர்க்கொரு ஆவற்பரி தாபக்குறை யேகப்புவி
மேலே வந்தமாலே

3 கங்கை யுதித்ததுபோலே — வரக்
கண்ணினால் கண்டேனேசால — இவர்
நாளைப் பருவதத்திற்கொரு வேளைக்குள் வேடங்கொளும்
கர்த்தர் பரிசுத்தர்

4 துங்கமிருந்த சஞ்சீவி — போன்ற
கோதைமயில் சீதாதேவி — சென்ற
துயரால்மன மிகவாடியே வந்தார் விரைவாய் தேடியே
துயர்மிகு பாராய்

சுக்ரீபன் வராததைப்பற்றி ஸ்ரீராமர் கோபித்தல்.

பாதிராத்திரி வேளையில் என்ற வர்ணமெட்டு.

1 என்னமாயமோ சொன்னசுக்ரீபன்
இன்னமும் வரக்காணேன் — கெட்ட
எண்ணமோ ஒன்றுந்தோணேன் — தம்பி
எவ்விதமறியேனே — அவன்
ஏற்றமென்னமோ கேட்டுவந்தெனக்
கியம்புவாய் கொடிதானே

அண்ணன் வாலியைக்கொன்ற அம்புபோல்
ஆயிரங்கணையுண்டு அதை
அறியாமல் மதங்கொண்டு வீணாய்
அழியாதே மூடாவென்று வெகு
ஆக்கிரமத்துடன் தாங்கிடப்புகன்
றறிந்துவா பதிலின்று

சுந்தர காண்டம்.

சீதை தன் துயரத்தை திரிச்சடையிடம் முறையிடல்

திருப்புகழ் மலடிவயற்று மகன்போலே என்ற வர்ணமெட்டு.

சீதை சொல்வது.

1 மங்கை திரிச்சடையே நானேதுயர்
பொங்குதே யென்செய் திடுவேனோ-என்
மன்னவனைப்பிரிந் தினந்தானே பூவிலிருந்தானே

திரிச்சடை சொல்வது.

2 நங்கைஜானகியே வாடாதே ஒரு
பங்கமும் வந்தணுகிடாதே-கெட்ட
ராட்சதர் கொட்டமும் நீடாதே துயராடாதே

சீதை சொல்வது.

3 பாவிஇருப்பிட மறிவாரோ அவன்
ஆவியிராதெனக் குறிவாரோ அவள்
பார்த்திடலாமென வருவாரோ மனதெவ்வாறோ

திரிச்சடை சொல்வது.

4 தேவியுன் சஞ்சலமாறிடவே படு
பாவியைகொன்றுக் கூறிடவே-உனை
தேடியநாதனும் வந்திடுவார்நீயும் தேறிடவே

இராவணன் சீதையைக் கெஞ்சல்.

கருவினுருவாகிவந்து என்ற வர்ணமெட்டு.

1 பாவையே யுனையேநினைந்து குழமையலால் மெலிந்து
பாவிமிகவே நலிந்து துயராகி

பாசமதிலேமிகுந்து ஆசைவெகுவாய் வளர்ந்துன்
பாகுமொழிமே லுகந்து வரலானேன்

2 தேவியெனை யாதரிந்து ஆவலதையே தவிர்த்து
தேறுதல் மனக்களிப்பு தருவாயே
தேஜசு நிறைந்தரத்ன மாசருவிலாசித்ர
சேலனசுகன்ற கண்கொள் மடமானே

3 காவிமலர் பூக்கள்மீது தாவிவளர் வண்டினங்கள்
பாரிருளையொத்த கூந்தல் முடிமீது
காதலொடு ஒன்றுங்கூடி ராகமதை நின்றுபாடி
காமரஸ மென்றழைக்கும் வகையாலே

4 பாவிமதராஜனம்பு மேவியெனையண்டிடவும்
பண்ணுமொரு யிம்சைதனை பாராயோ
பட்சமுட னென்னை யிச்சையுடனே யணைந்து
பற்பல சுகங்களின்பம் பெருவாயே

சீதை இராவணனை இடித்தல்.

திருப்புகழ் மலடிவயற்று என்ற வர்ணமெட்டு.

1 ராட்சஸப்பதரே யேர்க்காதே அர
சாட்சியானதை தோர்க்காதே வெகு
ராமன் தேவியைப் பார்க்காதே வாழ்வுபோக்காதே

2 ராவணனேகெட்ட படுபாவி என்மேல்
ஆவல்கொண்டாயே நானொருபாவி குலம்
நாசமுறும் என்விருதாவிற் கெட்டலையாதே

3 ஆசுஷியாய்க்கெர்வங் கொள்ளாதே வெகு
மாசுஷியாய்ப்பதில் விள்ளாதே உன்
ஆள்கையுமினி நில்லாதே பாவம்கொல்லாதே

4 தீயுரைசொன்னாக் கெரியாதோ பத்து
வாயிலும்புழுவாய்ச் சொரியாதோ அடா
தீனனேஉன்தலைமிறியாதோ குடல்சரியாதே

யுத்த காண்டம்.

ஸ்ரீராமர் யுத்தம் மகோதரன் சம்ஹாரம்.

வெள்ளிமலை யொத்தபலமேடை என்ற வர்ணமெட்டு.

1 பாவிமகோதரனேவாடா விடும்
பாணத்துக்கு ஓர்மொழி சொல்லும்மூடா நீயும்
பங்கப்படவே ராவணின் பங்கிலேயிருந்துகுடி
கெடுத்தாய் இங்கு அடுத்தாய்

இந்திரஜித்து வதம்.

2 தேவர்களையேவதைக்கும் பித்தே கொண்ட
திரனையப்பிறந்த இந்திரஜித்தே உந்தன்
தேரையுமுறித்துகெட்ட பேரையுமழிக்ககணை
தானே விடுத்தேனே

ராவண சம்ஹாரம்.

3 ராமபாணத்தைதக் கரத்திலெடுத்தார் துஷ்ட
ராவணனைக்கொல்லவென்று விடுத்தார் கண்டு
நன்னயஞ்சேர் அந்தரத்தில் உன்னித தேவர்களாலே
மலர்நிறைத்தார் அருள்புரைத்தார்

விபீஷணன் ஸ்ரீராமரைப்பணிவதும் லங்கையை முடிசூட்டிக்கொள்வது.

சந்தவனை வந்தருக என்ற வர்ணமெட்டு.

1 தொண்டர்பணி புண்டரீகத்தூயா துஷ்டர்க்
கண்டனம்புரிய வந்தமாயா எழில்
சுந்தரிஜானகி மகிழ்நேயா
கணிவாயா மிருபாயா என்றன்
தொல்வினை யகற்றிடுஞ்சகாயா

2 தெண்டனிட்டேன் முண்டனுடன்தானே ஒரு
ஜென்மமுமெடுத்த பாவிதானே என்
அண்டையிலிருக்கும் விதங்கோனே
பெருமானே சீமானே வெகு
அன்புடனருள்புரி பூமானே

ஸ்ரீராமர் லங்கையை விபீஷணருக்கு முடிசூட்டல்.

3 சந்திரசூரிய ருள்ளகாலம் வரை
தந்தேனு னுனக்கிலங்கைசீலம் இனி
சந்தோஷமுடனே யெந்தநாளும்
அதையாளும் புகழ்நீளும் தக்க
சிரஞ்சீவியாய் மேன்மேலும்

ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்.

பூமிமெச்சிடும் என்ற வர்ணமெட்டு.

1 நாட்சியன்றி அரசாட்சிசெய்ய ராமச்சந்திரன்
அதிசுந்திரன் வெகுதந்திரன் அவர்
தம்பிமார்களோடு வும்பரும்புகழ
சாமரஞ்செய்தா னிந்திரன்

2 காட்சிசேர் அயோத்தி மாட்சியாய்ப் பெருமைகாட்டினர்
முடிசூட்டினர் பறைதிட்டினர் வெகு
காதலோடுரம்பை மாதர்கள்நடனங்
கூட்டினர் துதிபூட்டினர்

3 தேசதேசமன்ன ராஜராஜன்தன்ன தேறினர்
மணமாறினர் பதங்கோரினர் ராம
தேசிகர்க்குறிய ஆசிகள்பலவுங்
கூறினர் பத மேவினர்

4 மாசிலாஅந்த தேஜசு நிறைந்த மங்கையாள்
மலர்ச்செங்கையாள் சீதைநங்கையாள் உடன்
மங்கலர்துலங்க துக்கமான செங்கோல்
வாங்கினர் கையிற் றுங்கினர்

ஸ்ரீராமர் கீர்த்தனம்.

துமறெத்து றகுவாறு என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

ரெகுராமா தயாளனே ஆதிமூலனே ரெகு

அநுபல்லவி.

1 ஆதிமூலனே சீலனே யாதவகுலபாலனே
மாதுஜானகி லோலனே மாரவேள்பிதாவே தஞ்சங்
காரும் காருமே ரகு

2 சாகரத்திடத்தகம்ஸ பாவியைக் கொன்றோனே பார்
முழுதுண்டவா ரகு

3 ஈரட்சரந்தனிலே சீராய்பதிந்தவனே
நேராய்ப்பணியுமன்பர் நெஞ்சினி லிருப்பவர் நிற்குண
மாயனே ரகு

4 பார்க்கடலைமற்றாயின்றாய் பாவைமகிழ் நின்றாய்
கார்க்கக் கருடனேறி கண்ணுவருவாய் கிருஷ்ணசாமி
தாசனே ரகு

ஸ்ரீராமர் கீர்த்தனை.

வெள்ளிமலை யொத்தபலமேடை என்ற வர்ணமெட்டு.

1 ஆதிமூலமென் றலரித்தானே நின்ற
ஆனையைக்கார்த்திட குணவானே வல
காசைதனையே நெகிழ்ந்துன் பாசமதிலேபுகுந்த
நானே துதித்தேனே

2 வேதனை அழித்த பிரகாசா திரு
விற்புருக நங்கையின் வுல்லாசா உயர்
வேந்தனெனவேசிறந்த சாந்தகுணமாஞ்சுக
விலாசா ஜெகதீசா

3 ராகவனே ராகவனேயென்று அருள்
நாடியே திருப்பதியேசென்று வுனை
நம்பினவர் துன்பமதை யின்பமுடனே தவிர்க்கும்
கோனே பெருமானே

4 தேசமேபுகழும் ஜெயங்கொண்ட கிருஷ்ணன்
செப்பியபதத்தினால் வைகுண்டம் அருள்
சேருமென காறுமொழி பாரினுரை நீதிவழுவாதே
கோரியப்போதே

ஸ்ரீராமர் கீர்த்தனம்.

மஞ்சுளகிகர் குந்தளமின்ன என்ற வர்ணமெட்டு.

1 வேதமுடிமீதுணரவோனே விண்ணவரேற்ற மண்ணு
ளோர்போற்ற வேலைமீதி லேதுயில்வோனே வுனை
வேண்டினேனெனை ஆண்டருள்பஞ்ச பாண்டவர்க்கருள்
பூண்டதற்புரி வித்தாநின் பொற்பாதம்பானே
தினம்பணிந்தேன் மனந்துணிந்தேன்
வேதனையளித்த பெம்மானே

2 காதலிற்ஜானகிநேயா சிற்றன்னைவாக்கே அற்புதமாக்கி
கானனம்நடந்த ஒதுாயா அன்று
கடியமொழிபுகல் கொடியதாடகைமடிய
ஒருகணை நொடியிலெய்து
அக்காதகியைக் கொன்ற செவ்வையா
இன்னமும்வாழ் யேனோ யென்மீது
கர்க்ககவி யாமளநேயா

3 நித்தமுஞ் சங்கீதக்கூட்டமே தொண்டர்கள் கூடிகொண்
டாடிப்பாடி நெஞ்சத்தின் கவலை ஓட்டமே துங்க
நிருபர்புகழ்குண செந்தின்மாநகர்
முருகன்மேலொயில்சிந்துபாடிய நேசனு மண்ணுமலைதாசன்
வையகந்தன்னில் செந்தமிழைப்போல
நேர்மையாய் செய்தான் கிருஷ்ணதாசன்

4 சித்திரவிமானமீதேறி பக்தர்விலாசன் சித்தர்வுல்லாசன்
தேடிடுந் தாசர்களைக்கோரி வுயர்
சேவைதரமனம் பரவிடபக்தர் மேவிபஜனைகள் கூடிட அங்கு
சேயன்கிருஷ்ண சாமிகூடவே
செந்தமிழாலே வைகுந்தன்மேலே
செஞ்சொல்லையின் கீர்த்தனம் பாடவே

ஸ்ரீ வெங்கடாஜலபதி கீர்த்தனம்.

அள்ளி அள்ளி நீர்குடிக்கும் என்ற வர்ணமெட்டு.

1 கங்குலகற்றுந்திரு வேங்கட்டராமனை
கண்டுதெரிசிப்பவர் பவமறுப்பவர் கண்டுதெரிசிப்பவர்

கவலையனைத்தும் நொடியில்தொலைந்து
கதியையளிக்கும் புவியிற்ஜொலிக்கும் கங்கு

2 அங்குமிங்கும்புவியில் எங்கும்நிறைந்தவன்
அன்பர்க்கருள்புரிந்தவன் வனமிருந்தவன்
அன்பர்க்கருள் புரிந்தவன்
அந்தமிகுநத சோலையடைந்த ஏழுமலையில்வாழுமுகுந்தன் கங்கு

3 செங்கைக்கினியநலச் சங்கமுங்கொண்டவன்
தேவர்புகழு மாண்டவன் ஆரம்பூண்டவன்
தேவர்புகழு மாண்டவன் தீராதிதீரன் ஸ்ரீரகுவீரன்
பாரையளந்தோன் சீரில்மிகுந்தோன் கங்கு

4 பங்கமிலாநர சிங்கமாய்வந்தவன்
பாலைமகிழநின்றவன் கனிதின்றவன் பாமைமகிழ நின்றவன்
பாலகன்கிருஷ்ண சாமியையாளும்
சீலமிகுந்த ஆதிமூலனே கங்கு

மங்களம்.

எந்தனை தொந்தரை என்ற வர்ணமெட்டு.

திருப்புகழ் இராமாயணக் காவடிச்சிந்து.

கண்ணிகள்.

1 மங்களமாஞ்செய மங்களமாஞ்சுப மங்களமாம் நித்திய மங்களம்
மாருதநாமம் ஸ்ரீராமனுக்கு மங்களமாஞ்ஜெய மங்களம்

2 நங்கையர்சீதா தேவியர்க்குமுயர் நலமுள்ளதம்பி மூவருக்கும்
நன்னயஞ்சேர்குரு வசிஷ்டமகாமுனி நாதனுக்கும்சுபமங்களம்

3 கௌசலைகைகேசிசுமித்திரையோடு மரிகைதாய்மார்யாவருக்கும்
கண்ணியமாக மண்ணின்வாழி கண்டிடவே சுபமங்களம்

4 அம்சமும்ராஜ அம்ஸமேராம அம்ஸமெனு மிச்சரிதையினை
அன்புடன்படிப்போர் அறிவுடன்கேட்போர் அனைவருக்கும்சுப

மங்களம் மங்களம்

முற்றிற்று.

சோதிட புத்தகங்கள்.

சாதக சிந்தாமணி (திக்கு கடிதம் அட்டைபயிண்டு)	1	8	0
மேற்படி (திக்குகடிதம் கலிகோ பயிண்டு)	2	0	0
மேற்படி (கிளேஸ் கடிதம் கலிகோ பயிண்டு)	2	8	0
சோதிட கிரகசிந்தாமணி என்னும் பெரிய வருஷாதிநூல் திக்குகடிதம் (அட்டைபயிண்டு)	0	12	0
மேற்படி (திக்குகடிதம் கலிகோபயிண்டு)	1	0	0
விநாடி பஞ்சபக்ஷி சாஸ்திரம் (மூலமும் உரையும்)	1	4	0
கமலமாமுனி ரேகைசாஸ்திரம் (மூலமும் உரையும்)	1	0	0
போகர் பஞ்சபக்ஷி சாஸ்திரம் (மூலமும் உரையும்)	0	14	0
அகஸ்தியர் பஞ்சபக்ஷி சாஸ்திரம் (மூலமும் உரையும்)	0	12	0
சாதகாலங்காரம் (மூலம்)	0	12	0
பெரிய சில்ப சாஸ்திரக் களஞ்சியம் சில்பசாஸ்திர (திக்குகடிதம் கலிகோபயிண்டு)	2	0	0

வைத்திய புஸ்தகங்கள்.

உரோமரிஷிநாயனார் வைத்தியம் 500	0	10	0
போகமுனிவர் வைத்தியம்-700	0	10	0
போகமுனிவர் ஜெனன சாகரம்	0	12	0
அகஸ்தியர் வைத்திய காவியம்-1500	1	0	0

விளம்பரம்.

வித்தியாப்பியாசிகளுக்கு தெரிவிப்பது யாதெனில்:—

எமது புத்தகசாலையில் அநேகவித சரித்திரங்கள், திருப்புகழ் காவடிச்சிந்து வர்ண மெட்டுகளில் எழுதி அச்சிட்டிருக்கிறோம். தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கெழுதி பெற்றுக் கொள்ளலாம்.

புத்தகங்கள் தேவையானவர்கள் வேண்டிய புத்தகங்களின் விலைக்குத் தகுந்த போஸ்டு பில்லைகள் வாங்கி கவரில்வைத் தனுப்பினால் உடனே நீர் கோரிய புத்தகத்தை அனுப்புவோம். தபால் பில்லைகள் அனுப்பாமல் அனுப்பச்சொல்லி எழுதினால் நாங்கள் அனுப்ப வி. பி. சார்ஜ் 1-புத்தகத்திற்கு 5-அணாவாகும். அதனால் மேற்சொன்னபடி தபால் பில்லைகள் அனுப்பினால் நாங்கள் நட்பெட் போஸ்டாக அனுப்புவோம் நீங்கள் அவ்விடத்தில் 1-அணா கொடுத்து வாங்கிக் கொள்ளவும். அப்படி அனுப்பினால் புஸ்தகம் உங்களுக்கு பத்திரமாக வந்து சேரும்.

வேண்டியவர்கள் உங்கள் விலாசத்தை விவரமாய் எழுதவும்.

இப்படிக்கு,

தாயாரம்மாள்,

நெ. 28, பெருமாள்கோவில் தோட்டத்தெரு 2 வது சந்து மதறாஸ்